## *22*

# சிலுவையின் ரகசியம்

## ரோமர் 16:25-27;
## கொலோசெயர் 1:25-28; 2:2, 3

*"அன்றியும் தேவபக்திக்குரிய ரகசியமானது யாவரும் ஒப்புகொள்ளு கிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமை யிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்" (1 தீமோத்தேயு 3:16).*

"ரகசியம்" என்பது (மாயமான பரவசநிலைகள், அதிர்வுகள், மதம்சார் குழு அல்லது ஹாப்கோப்லின்கள் போன்றவற்றின் விஷயத்தில் போன்று) "மாயாவாதமான" என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது. ரகசியமும் மூட நம்பிக்கையும் பொதுவான குணங்கள் எதையும் கொண்டிருப்பதில்லை. மக்கள் மந்திரவாதம், இயல்புக்கு மீறியவை மற்றும் உணர்வுப்பூர்வ மானவை ஆகியவற்றை நேசிக்கின்றனர். நாம் சத்தியத்தைப் புரிந்து கொள்வதைவிட நமது ஆர்வத்தைக் கிள்ளிவிடுவதில் அதிக விருப்பம் கொண்டிருக்கிறோம். சுவிசேஷ செய்தியில் தேவன் நமக்கு ரகசியத்தின் சரியான வகையைக் கொடுக்கிறார். எளிய மற்றும் தெய்வீக விஷயங்கள் தங்களில் எப்போதுமே (திருமணம் போன்ற; எபேசியர் 5:20-33) ரகசியம் ஒன்றை கொண்டுள்ளன.

நாம் புரிந்துகொள்ளக்கூடியவற்றைவிட அதிகமானவற்றை நாம் சுலபமாகக் கூற முடியும். "ரகசியம்" என்பது, நாம் ஒரு துப்பறிபவரின், உதவியுடன் கண்டுபிடிக்கத் தேவையான சிலவிஷயமாக இருப்பது இல்லை. அதில் அர்த்தம் இல்லாதிருப்பதில்லை, ஆனால் அது நாம் புரிந்துகொள்ளக் கூடியதைக் காட்டிலும் மாபெரும் அர்த்தம் இருக்கிற விஷயமாக உள்ளது. சிலவற்றை நீங்கள் புரிந்துகொள்ள இயலாது என்ற உண்மையானது, நீங்கள் அதைப் புரிந்துகொள்ளவே முடியாது என்று அர்த்தப்படுவதில்லை. எவரொருவரும், அன்பு, விசுவாசம், நீதி அல்லது நற்தன்மை ஆகியவற்றை முழுவதுமாக புரிந்துகொள்ள இயலாது; ஆனால் நாம் அவற்றை விசுவாசிக் கிறோம் மற்றும் அவற்றைக் காட்சிப்படுத்த நாடுகிறோம்.

சிலுவை என்பது தேவனுடைய மாபெரும் ரகசியமாக உள்ளது. ஒரு சிறுகுழந்தை அதிலிருந்து குடிக்க முடியும்; வயதான மனிதர் ஒருவர் அதன் மீது தமது வாழ்நாள் முழுவதும் தியானம் செய்ய முடியும். இருந்தாலும்

மக்கள் இன்னமும் அதைப்பற்றி "சிமிழ் அளவு"கூட அறிவதில்லை. அது "விளக்கியுரைக்க முடியாததாக" உள்ளது, ஆயினும் நாம் அதன் நித்திய சத்தியத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியும். ரகசியம் என்பது அறைகூவல் விடுக்கிறது மற்றும் வளர அனுமதிக்கிறது. சட்ட நூல்கள் ரகசியங்கள் எதையும் கொண்டிருப்பதில்லை.

ரகசியம் என்பது நமது பிடிக்குள் வர மறுக்கிறது மற்றும் அது மற்றவர்களுக்கு உரைக்கக் கடினமானதாக உள்ளது. நித்திய கொள்கைகள் மனித வார்த்தைகளைவிட நீளமானவைகளாக உள்ளன. நாம் யாரென்று நாம் அறிந்துள்ளதாக நாம் நினைக்கிறோம், ஆனால் கடைசியில் நாம் நம்மை ஒரு இருட்டான கண்ணாடி வழியாகக் கண்டு கொண்டிருப்பதை உணர்ந்தறிகிறோம்! (1 கொரிந்தியர் 13:12ஐக் காணவும்.) "இதை நான் ஒருக்காலும் புரிந்துகொள்ளவில்லையே!'' என்று நாம் கூறுவதை விளைவிக்கும் அன்றாட வியப்புகளை நாம் கொண்டுள்ளோம். பாவம் நிறைந்த மனிதன் எப்போதுமே, பொருட்படுத்தக்கூடாத விஷயங்களில் பலவானாக இருக்கிறான், ஆனால் பொருட்படுத்தப்பட வேண்டிய நித்திய விஷயங்களில் அவன் பலவீனனாக இருக்கிறான். நாம் ரகசியத்தை வெற்றிகொள்வதில்லை - நாம் அதைப் பயன்படுத்துகிறோம், அதில் வளருகிறோம், மற்றும் அதைக் கொண்டாடுகிறோம்.

ரகசியம் என்பது வெளிப்படுத்துதலினால் மாத்திரமே புரிந்துகொள்ளப்படுகிறது. முகாந்தரத்தினால் அல்ல. தேவன் அறியப்படக்கூடியவராக இருக்கிறார், ஆனால் அவரைச் சித்திரிக்க இயலாது. நாம் தேவனுடைய கோபத்தை ஏற்றுக்கொள்ளாத வரையில் அவரது கிருபையைப் புரிந்து கொள்ள இயலாது. நாம் சிலுவையைப் புரிந்துகொள்ளாத வரையில் நம்மால் கிறிஸ்தவத்தைப் புரிந்துகொள்ள இயலாது.

ரகசியம் இல்லாத இடத்தில் ஆச்சரியம் எதுவும் இருப்பதில்லை. ஆச்சரியம் இல்லாமல் உண்மையான ஆராதனை எதுவும் இருப்பதில்லை. ஒருவர் ஒரு மாயவித்தையை விளக்குகிறபோது, அதில் ஒன்றும் விடப்படாதிருப்பதைக் காணுகிறார்; நாம் தேவனுடைய ரகசியத்தை ஏற்றுக்கொள்ளும்போது, நாம் ஒவ்வொன்றையும் கண்டறிகிறோம்!

கிழக்கத்திய மதத்திலோ அல்லது மேற்கத்திய தர்க்கவாதத்திலோ ரகசியங்கள் கண்டுபிடிக்கப்படுவதில்லை. ரகசியம் என்பது தெய்வீக வெளிப்படுத்துதலினால் மட்டுமே வருகிறது. ஒரு ரகசியம் என்பது தேவனால் மாத்திரமே வெளியிடப்படக்கூடிய நித்திய ரகசியமாக உள்ளது. ஒருகாலத்தில் மறைக்கப்பட்டிருந்த சத்தியம் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மறைவானவைகள் தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள் ஆகும் ... ஆனால் அவைகள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தேவனுடைய ரகசியத்தில் பிரவேசிப்பதற்கு அதற்குள் "அறிமுகப்படுத்தப்பட்டவர்களில் ஒருவராக" இருக்க வேண்டும் என்றோ அல்லது "ரகசியமான கை குலுக்குதலை" அறிந்திருக்க வேண்டுமென்றோ இல்லை.

சுவிசேஷ செய்தி ஒரு ரகசியமானது என்று பவுல் கூறினார் (எபேசியர் 6:19). விசுவாசம் என்பது சுத்த மனச்சாட்சியில் வாழப்பட வேண்டிய ஒரு ரகசியமாக உள்ளது (1 தீமோத்தேயு 3:9). கிறிஸ்துவில் மீட்பு என்பது

யூதர்களையும் புறஜாதியாரையும் இரட்சித்து ஒன்றிணைக்கிற ரகசியமாக உள்ளது (எபேசியர் 1:7-13). கிறிஸ்துவைப் பற்றிய இந்த சத்தியம், உலகம் தொடங்கிய நாளில் இருந்தே ரகசியமாகக் காக்கப் பட்டிருந்தது என்று பவுல் கூறினார் (ரோமர் 16:25, 26; 1 கொரிந்தியர் 2:7). இந்த ரகசியம் "விசுவாசத்திற்குக் கீழ்ப்படிதலுக்கானதாக" இருந்தது (ரோமர் 1:5). வெளிப்படுத்துதலினால் வந்த ரகசியம், எதை விசுவாசிக்க வேண்டும் மற்றும் எதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது பற்றி நமக்குக் கூறுகிறது. கிருபையின் இந்த ரகசியத்தை அவரது பரிசுத்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாக ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார் (எபேசியர் 3:2-6). இந்த சத்தியம், இந்த ஒருமைப்பாடு இதற்குமுன்பு அறியச்செய்யப்பட்டதில்லை. மேலும் பவுல், "கிறிஸ்துவும் சபையும்"கூட "மாபெரும் ரகசியம்" என்பதாகக் குறிப்பிட்டார் (எபேசியர் 5:32). அவர் இந்த விவரிப்பை, கணவர்கள் மற்றும் மனைவிகள் மற்றும் திருமணத்தின் ஆழம் ஆகியவற்றைக் குறித்துப் பயன்படுத்தினார் (எபேசியர் 5:21-33). வாழ்வின் அழகிய விஷயங்கள் மற்றும் மாபெரும் விஷயங்கள் யாவையும் ரகசியத்தை உள்ளடக்கியிருக்கின்றன.

எபேசியர் 3:9-11ல் சத்தியத்தைப் பற்றிய மாபெரும் வெளிப்படுத்துதல் களில் ஒன்று காணப்படுகிறது. தேவன் எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் கிறிஸ்துவுக்கென்று படைத்தார். படைப்புக்கு முன்னதாகவே தேவன் தமது சிந்தையிலும் இருதயத்திலும் ஒரு சிலுவையை நட்டுவைத்திருந்தார். சிலுவையின்மீது கிறிஸ்து அவருடைய [தேவனுடைய] திட்டத்தை நிறை வேற்றினார். அவரது இரத்தம் சபையை கிரயம் கொண்டது (நடபடிகள் 20:28). இப்போது, தேவனுடைய இந்த ஞானமானது கிறிஸ்துவுக்குள் அவரது சபையில் மாத்திரம் காட்சிப்படுத்தப்படுகிறது. இதுவே தேவனு டைய நித்திய நோக்கமாக உள்ளது. ரகசியம் என்பது முழுமையும் அறியாமலேயே கீழ்ப்படிதல் இருக்க வேண்டும் என்று கோருகிறது. நாம், வேதவசனங்களின் எளிமையான சத்தியங்களை நம்பி அவற்றிற்குக் கீழ்ப் படிய வேண்டும் மற்றும் அன்றாடம் வசனத்தின் அறிவில் வளரவேண்டும்! நாம் புரிந்துகொள்ள இயலாதவற்றை மறுக்காதிருக்கப் போதுமானவற்றை நாம் அறிந்திருக்க வேண்டும்.

மாபெரும் வாழ்வானது மாபெரும் ரகசியத்தை வற்புறுத்துகிறது! "... இந்த ரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை" (எபேசியர் 3:5ஆ, 6) என்பதுபோன்ற மிகவும் ஆச்சரியமான விஷயங்களை முழுமையாகப் புரிந்துகொண்டிருப்பதற்கு, நமது ஆழமான உணர்வுகள் அவற்றின்மீது கவனம் குவிக்க வேண்டும்.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*